**செ. கு. எண்: 04** நாள்:08.01.2010

## தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம்

## சேப்பாக்கம், சென்னை 600 005

************

### நன்றி அறிக்கை

### 08. 01. 2011

தென்னை விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ஆகஸ்டு திங்கள் 2010 அன்று தென்னை விவசாயிகள் நல வாரியத்தை அமைத்து, தென்னை விவசாயிகளின் வாழ்க்கையில் ஒரு ஒளிமயமான நம்பிக்கையை உருவாக்கி, அதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்திட அரசு எடுத்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம் சார்பாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

அதன் தொடர் நடவடிக்கையாக 2011 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் "பனை, தென்னை விவசாயிகளின் நலன் கருதி பனை நுங்குச்சாறும், தென்னை இளநீரும் பக்குவப்படுத்தப்பட்டுத் தயாரிக்கப்படுகிற சுவை நீர், காதி கிராமத் தொழிற் சங்கங்கள் வாயிலாக விற்பனை செய்யப்படும்,

தென்னை விவசாயிகள் நல வாரியம் மூலம் தேங்காயைக் கொள்முதல் செய்து கொப்பரை தயாரிக்கவும், இந்த வாரியம் மூலம் தயாரிக்கப்படுகின்ற தேங்காய் எண்ணெயைச் சத்துணவு திட்டத்தில் தற்போது வழங்கப்படும் பாமாயிலுக்குப் பதில் பயன்படுத்தவும், கூட்டுறவு அங்காடிகள் மூலமாக விற்பனை செய்யவும் இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்'', என்று தெரிவிக்கப்பட்டுள்ளதை இவ்வாரியமும், தமிழக தென்னை விவசாயிகளும் இவ்வரசை மனமார வாழ்த்துகிறார்கள்.

“கள் இறக்கும் தொழிலாளர்கள், கள்ளை இறக்குவதற்கும் விலை குறிப்பதற்கும் அமைதியான முறையில் அவர்கள் தங்கள் கோரிக்கைகளை அரசுக்கு தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் சார்பாக ஒரு குழுவை அமைத்து அதன் பரிந்துரை அடிப்படையில் சமுதாய நலன் கெடாத வகையிலும், தந்தை பெரியார் அவர்களின் கூற்றுப்படி, உழைக்கும் மக்களின் உடல் சோர்வை அகற்றும் எளிய “ டானிக்”கான கள் விற்பனையை எப்படி நடைமுறைபடுத்தலாம் என முடிவு செய்வது பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது’’, என்று முதல்வர் கலைஞர் அவர்கள் தனது கேள்வி பதில் அறிக்கையின் வாயிலாக மே திங்கள் 2009 அன்றே தெரிவித்துள்ளார்கள். இந்நிலையில், “தென்னை இளநீரும், பக்குவப்படுத்தப்பட்டுத் தயாரிக்கப்படுகின்ற சுவை நீரும் காதி கிராமத் தொழிற் சங்கங்கள் வாயிலாக விற்பனை செய்யப்படும்” என்ற அறிவிப்பினை தென்னை விவசாயிகள் நெஞ்சார வரவேற்கின்றார்கள்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி, அவர்களின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திட உழவர் சந்தைகளை ஏற்படுத்தி, அவர்களின் கடன் சுமையை அறவே அகற்றி, விவசாயிகளுக்கு மேலும் 2 லட்சம் கிணறுகளுக்கு புதியதாக இலவச மின்இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்து, மற்றும் 22 லட்சம் மின் மோட்டார்களை இலவசமாகக் கொடுப்பதாகவும் அறிவித்து, விவசாயிகளுடைய நலன் காக்கும் **பாதுகாவலனாக** என்றென்றும் விளங்கி வரும் தமிழக முதல்வர் அவர்களுக்கு தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம் சார்பாகவும், தமிழக தென்னை விவசாயிகள் சார்பாகவும் உளமார்ந்த நன்றியினைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

ராஜ்குமார் மன்றாடியார்,
தலைவர்.

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**